V12T

விருதுநகர் மாவட்டப் பள்ளிகள்
முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 12

நேரம் : 1.30 மணி

பொதுத்தமிழ்

மதிப்பெண்கள்: 50

பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: **8×1=8**

1) சிற்பி. பாலசுப்பிரமணியத்தின் இளந்தமிழே பாடல் இடம்பெற்றுள்ள நூல்
அ) காவியதர்சன் ஆ) மஸ்னவி இ) நிலவுப்பூ ஈ) துறைமுகம்

2) "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேரிலாத தமிழ்!" இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடை நயம்
அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) அடிஎதுகை, சீர்மோனை
இ) சீர்எதுகை, அடிமோனை ஈ) சீர்மோனை, சீர்எதுகை

3) பிழையான தொடரைக் கண்டறிக.
அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுக்களைக் கண்டறிந்தனர்.
இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.
ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

4) நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைத்துளிகள்
இ) மழை மேகங்கள் ஈ) நீர்நிலைகள்

5) உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது
அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடு தேவையாகிறது.
ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகின்றது.
இ) காலநிலை மாறுபடுகிறது.
ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது.

6) சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ..........
அ) அறவோர் துறவோர் ஆ) மன்றங்களும் அவைகளும்
இ) திருமணமும் குடும்பமும் ஈ) நிதியமும் சுங்கமும்

7) குடும்பம் எனும் சொல் பயின்று வரும் திருக்குறள் எண்
அ) 1039 ஆ) 1027 இ) 1037 ஈ) 1029

8) அன்பும் அறனும் - இச்சொல்லுக்கான இலக்கண குறிப்பு
அ) உம்மைத்தொகை ஆ) வினைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) எண்ணும்மை

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×2=4**

9) கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

10) 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.

11) மறக்கக்கூடாதது மறக்கக்கூடியது எவற்றை?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: **2×2=4**

12) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

13) 'ஆளுக்கு ஒரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

14) புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** 3x2=6

15) **தமிழாக்கம் தருக:**
The limits of my language are the limits of my world.

16) **உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக:**
கிணற்றுத்தவளை போல

17) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
கலை, களை, கழை

18) திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

## பகுதி - III

பிரிவு - 1

**எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக:** 1x4=4

19) 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

20) சடாயுவை தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக:** 1x4=4

21) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

22) பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

பிரிவு - 3

**எவையேனும் ஒன்றனுக்கு விடை தருக:** 1x4=4

23) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**(அல்லது)**

கீழ்க்காணும் குறளில் ஏகதேச உருவக அணி எவ்வாறு பயின்று வருகிறது என்பதை விளக்குக.
சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** 2x6=12

24) அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

ஆ) செய்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

25) அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்புநலத்தை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ............ கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக:** 1x4=4

26) "ஓங்கலிடை ............" எனத் தொடங்கும் தண்டியலங்கார உரை மேற்கோள் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

----------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com